முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1637

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.03.2024**, சனிக்கிழமை

1. மாதர்ம ராஜனே அரங்கா வாழ்க
மண்ணுலகம் மீட்க வந்த குருராஜா வாழ்க
பூதலத்தில் அரங்கன் உன் பெருமை கூறி
புகலுவேன் சுப்ரமணியப்பெருமான் யானும்
2. யானுமே அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
நாட்டிடுவேன் சோபகிருது சேல் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 10 ம் நாள், 23.03.2024, சனிக்கிழமை)
ஞானவான் அரங்கன் உன் தர்மத்தால் தான்
நம்பகமுற இந்த பேருலகம் தர்மலோகமாகி
3. ஆகியே அரங்கன் உன் வழிகாட்டலில்
ஆற்றல்பட ஆன்மீக ஞான அரசியல் களம்
மாற்றமாக உலகம் கண்டடையும்
மக்களெல்லாம் ஞானவான்களாக மாறவே
4. மாறுதலாய் உலகில் ஞானிகள் ஆட்சி
மக்களை காக்கின்ற ஞானவான்கள் ஆட்சி
ஆறுதலாய் அரங்கன் உன் தொண்டின் வழி
ஆற்றல்பட பேருலகம் அடையக்கூடும்
5. கூடாத துன்பங்கள் அத்துனையும்
குவலயத்தை விட்டு அகன்றோடி
நாடெங்கிலும் அமைதி பாதுகாப்புஞானம்
நன்மை தரக்கூடிய ஞானஆட்சியுமாக
6. ஆகவே மாற்றம் அரங்கன்
உன் அவதாரம் ஆக
அகிலம் கண்டு அற்புதம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–